**ரத்கம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 13 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ரத்கம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்துக்களின் பெறுமதி மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை பங்களிப்பு கணக்கு மீதியிடையே ரூபா 3,401,225 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியான தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 26 காணிகள் மற்றும் கட்டிடங்கள், 02 டிரக்டர்கள் மற்றும் 02 டேலர்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்த மான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஹிக்கடுவ நகர சபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 5,760,007 தொகைக் கான தகனகூடம் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | அலுவலகத்தின் பாதுகாப்புக் குடில் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 62,499 தொகையினை மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | நடமாடும் நூலகத்தில் காணப்பட்ட ரூபா 826,776 தொகை பெறுமதியான 4,044 புத்தகங்களை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | ஹேகொட இருந்து முதலிகொட பாதையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 798,582 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 13,893,213 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,124,802 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலம் முதல் காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் காணப்படும் தொங்கல் கணக்கின் ரூபா 288,833 தொகைக்கான வரவு மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் உரிய நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கணக்கு மீதி தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 07 வருடங்கள் முதல் 17 வருடங் கள் வரையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 10,633,868 தொகைக்கான பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 12 வருடங்கள் முதல் 17 வருடங் கள் வரையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 1,201,260 தொகைக்கான செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 263,814,610 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நி.பி. 156 | 25,222 | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாமையால் கடந்த ஆண்டு விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புத் தொகையை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நி.பி. 570 மற்றும் 571(1) (2) | 923,928 | காலவதியாகிய 50 பொது வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,134,492 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,611,431 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,831,000 | 1,161,836 | 884,608 | 6,526,942 | 1,378,294 | 1,235,812 | 1,601,703 | 6,254,864 |
| வாடகை | 1,602,500 | 105,600 | 116,620 | 658,034 | 1,395,677 | 105,600 | 110,590 | 669,054 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 910,500 | 632,354 | 632,354 | 81,622 | 666,784 | 675,587 | 675,587 | 81,622 |
| | 4,344,000 | 1,899,790 | 1,633,582 | 7,266,598 | 3,440,755 | 2,016,999 | 2,387,880 | 7,005,540 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 7,005,540 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டை யிடல் ரூபா 1,899,790 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 8,905,330 தொகையாகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,633,582 தொகையாகக் காணப்பட்ட மையால் வருமானம் அறவீடுகள் 18 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 7,416,700 தொகையில் இருந்து ரூபா 884,608 தொகை அறவிடப்பட்ட மையால் வருமான அறவீடுகள் 12 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2006 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 8,850,610 இற்கான வீதவரி நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிலும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமான த்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 774,654 தொகையில் ரூபா 116,620 தொகை அறவிடப்பட்டமையால், அறவீடுகள் 15 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வருமான த்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,025,640 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 98,960,978 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மொன்ரோவியாவத்த காணியில் செயற்படுத்தப்பட்ட சேதனப்பசளை செயற்திட்டம் 04 வருட காலமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 கட்டிடங்கள் மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன கணக்காய்வுத் திகதியாகிய 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி வரை செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது. | குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்டகால வேலைத் திட்டம் செயற்படுத்த வேண்டும். | குப்பை முகாமைத்துவம் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

### (ஈ) கைவிடப்பட்ட செய்பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நடமாடும் நூலகச் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 3,348,276 தொகை பெறுமதியான வாகனங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ஈடுபடுத்தி இருக்கவில்லை. | மீண்டும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மீண்டும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/ 2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 22 கடைகள் வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. இந்தக் கடைகளில் 16 கடைகள் தொடர்பாக ரூபா 535,150 இற்கான கடை வாடகை நிலுவையாக காணப்பட்ட போதிலும், கடைகளுக்காக உடன்படி க்கைகள் காணப்படாமையால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தடையாகி உள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. | உடன்படிக்கைகள் மேற்கொள்ளவும் நிலுவை கடை வாடகை அறவீடு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கும் கடை வாடகை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) வெற்றிடமாகக் காணப்பட்ட 02 பதவி களுக்காக பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கு 21 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆட்சேர்ப்பதற்கும் மிகைப் பதவிகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) சபையின் 12 உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பதவிக்கு உரித்தில்லாத உயர் பதவிகளில் கடமைகள் மேவகை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டது. | பதவிக்கான கடமை சாட்டுதல்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பதன் மூலம் கடமைகளை சரி செய்வேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் இறந்துள்ள 06 ஊழியர்களிடம் 2006 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 26,760 தொகை மற்றும் 2016 ஆண்டின் போது சேவையில் இருந்து நீக்கப்பட்ட ஊழியர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,711 இற்கான மீதி ஒன்றினையும் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடனை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

**முன்பள்ளி நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டெல்மார் குடியிருப்பில் அமைந்துள்ள முன்பள்ளி 2012 ஆண்டு முதல் மூடப்பட்டிருந்ததுடன் முன்பள்ளியை திருத்த வேலை மேற்கொண்டு மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்பள்ளியின் திருத்த வேலைகள் மேற்கொண்டு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் காணப்படாமையால் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மூடப்பட்டிருந்த முன்பள்ளி பெண் பொறுப்பாளருக்கு எதுவித கடமைகளும் சாட்டப்படாமல் மீளாய்வாண்டு நவம்பர் | முன்பள்ளி திறக்கப்படா விடின் வேறு | இடமாற்றத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு |

| | | |
|---|---|---|
| மாதம் முதல் 2019 பெப்ரவரி மாதம் வரை மாதாந்தம் ரூபா 35,284 தொகை வீதம் ரூபா 141,136 தொகை சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | ஒரு நிறுவனத்திற்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்க வேண்டும். | அறிவித்துள்ளேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நிபந்தனை அடிப்படையில் ரூபா 456,500 தொகைக்கு குத்தகைக்கு கொடுத்திருந்த கருவா காணியை மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு கொடுத்திருக்காததுடன், பயிர் செய்கையை பராமரிக்காமல் கைவிடப்பட்டுள்ளது. | பயிர்செய்கையை பராமரித்து குத்தகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பராமரிக்கப்பட்டு விளைச்சலை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கிராமப் புறங்களில் சிறிய பாதைகளில் ஓடக்கூடிய சாக்கடை பவுசரை திருத்த வேலை மேற்கொண்டு வருமானம் உழைப்பதற் காக பயன்படுத்தாமல் சேதனப் பசளை உற்பத்தி செயற்தளத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. | திருத்த வேலை மேற்கொண்டு வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஜுலை 10 ஆந் திகதிய 02/2015 இலங்கங் கொண்ட திறைச்சேரிச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் டிரக்டர் வண்டி ஒன்று, கப் வண்டி ஒன்று, டேலர் ஒன்று மற்றும் சீமெந்துக் கலவை இயந்திரம் ஒன்று 2001 ஆண்டு முதல் சேதனப் பசளை செயற்களத்தில் நிறுத்தப் பட்டுள்ளது. | திருத்தவேலை மேற்கொள்ள முடியாவிடின் அப்புறப்படுத்த வேண்டும். | அப்புறப்படுத்தவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத் திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | |
|---|---|
| உரிய முறையில் செலுத்தப் படாமையால் ரூபா 85,893 இற்கான மிகை விதிப்பொன்று விதிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 156(1) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 12,205,490 இற்கான சேமிப்புக் காணப்பட்டதுடன், அந்தப் பெறுமதிகள் 33 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 03 செலவு விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 2,787,044 தொகை காணப்பட்ட துடன், அப்பெறுமதி 36 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | ஒரு வருமான விடயத்தின் பிரதி கூலமான முரண் ரூபா 11,631,549 தொகை அதாவது 78 சதவீதமாக காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியை வினவி இருந்ததுடன், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | போதியளவு பதவியணி ஒன்று அங்கீகரிக்கப் பட்ட பின்னர் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துவேன். |